அன்பளிப்பு வெளியீடு:

நூலாக்கம்:
க. சொக்கலிங்கம் (சொக்கன்) எம். ஏ.

வெளியீட்டு நாள்:
1988 - 11 - 24, வியாழக்கிழமை.

நினைவுக்குரியவர்:
யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு வாசரும்
சைவத் திருவாளருமான அமரர்
**இராமலிங்கம் கைலாசபிள்ளை.**

வெளியீடு:
அமரர் இரா. கைலாசபிள்ளை குடும்பத்தினர்.

அச்சுப் பதிவு:
சுவர்ணு பிறின்டிங் வேர்க்ஸ்,
295/7, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதிகள் கிடைக்கும் முகவரிகள்:

இ. சரவணமுத்து
செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

க. சொக்கலிங்கம் (சொக்கன்)
'வாணி', நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.



# இரு பெரும் நெறிகள்

- சைவ நெறி
- வேதாந்த நெறி

**க. சொக்கலிங்கம் எம். ஏ.**
**(சொக்கன்)**

நாயன்மார்கட்டு
**இராமலிங்கம் கைலாசபிள்ளை**
நினைவு வெளியீடு.
**1988.**

அன்பளிப்பு வெளியீடு: **6**

நூலாக்கம்:
க. சொக்கலிங்கம் (சொக்கன்) எம். ஏ.

வெளியீட்டு நாள்:
*1988 - 11 - 24*, வியாழக்கிழமை.

நினைவுக்குரியவர்:
யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு வாசரும்
சைவத் திருவாளருமான அமரர்
**இராமலிங்கம் கைலாசபிள்ளை.**

வெளியீடு:
அமரர் இரா. கைலாசபிள்ளை குடும்பத்தினர்.

அச்சுப் பதிவு:
சுவர்ணா பிறின்டிங் வேர்க்ஸ்,
295/7, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதிகள் கிடைக்கும் முகவரிகள்:
இ. சரவணமுத்து
செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
க. சொக்கலிங்கம் (சொக்கன்)
'வாணி', நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

# முகவுரை

நாயன்மார்கட்டு வாசரும், கோப்பாய்க் கிராமச் சங்க முன்னாள் உறுப்பினரும், யாழ். முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் உபதலைவருமான திரு. இ. சரவணமுத்து, கடந்த பல ஆண்டுகளாகச் சிறந்ததொரு பணியினைக் கைம்மாறு கருதாது ஆற்றி வருகின்றார். தம் குடும்பத்தில் எவரேனும் மறைந்தால் அவ்வாறு மறைந்தவரின் நினைவாகச் சமயம், அறப்போதனை சார்ந்த பயன்தரும் நூல் ஒன்றை எழுதுவித்து அச்சேற்றி இலவச விநியோகம் செய்வதே அந்த அரும் பணி, **அறநெறிப் பாமஞ்சரி, கந்தபுராணம் - காசிபன் உபதேசப் படலம் - உரை விளக்கம், சைவம் வளர்த்த தையலர், பாரதியின் பராசத்திப் பாடல்கள், பத்திப்பா அமுதம்** என்பன அவரால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களாகும். இந்நூல்களைத் தொகுத்தோ, உரைவகுத்தோ, எழுதியோ அளிக்கும் பொறுப்பு அவரால் என்னிடம் ஒப்படைக்கப்படுவதை, நான் இன்றுவரை நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் ஏற்று நிறைவேற்றி வருகின்றேன்.

இன்று, அவர் தமையனாரான அமரர் கைலாசபிள்ளை நினைவாக, அவரது அன்புப் பணிப்பினை ஏற்று, நான் எழுதிய **இருபெரும் நெறிகள்** என்னும் நூல் வெளியாகின்றது. 'இந்து நாகரிகம்' என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்க்குப் பயன்படல் கருதி, சைவ நெறி, வேதாந்த நெறி ஆகிய இரு நெறிகளையும் பற்றி எழுதப்பட்ட இரு கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

# முகவுரை

நாயன்மார்கட்டு வாசரும், கோப்பாய்க் கிராமச் சங்க முன்னாள் உறுப்பினரும், யாழ். முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் உபதலைவருமான திரு. இ. சரவணமுத்து, கடந்த பல ஆண்டுகளாகச் சிறந்ததொரு பணியினைக் கைம்மாறு கருதாது ஆற்றி வருகின்றார். தம் குடும்பத்தில் எவரேனும் மறைந்தால் அவ்வாறு மறைந்தவரின் நினைவாகச் சமயம், அறப்போதனை சார்ந்த பயன்தரும் நூல் ஒன்றை எழுதுவித்து அச்சேற்றி இலவச விநியோகம் செய்வதே அந்த அரும் பணி, **அறநெறிப் பாமஞ்சரி, கந்தபுராணம் - காசிபன் உபதேசப் பட்லம் - உரை விளக்கம், சைவம் வளர்த்த தையலர், பாரதியின் பராசத்திப் பாட்ல்கள், பத்திப்பா** அமுதம் என்பன அவரால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களாகும். இந்நூல்களைத் தொகுத்தோ, உரைவகுத்தோ, எழுதியோ அளிக்கும் பொறுப்பு அவரால் என்னிடம் ஒப்படைக்கப்படுவதை, நான் இன்றுவரை நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் ஏற்று நிறைவேற்றி வருகின்றேன்.

இன்று, அவர் தமையனாரான அமரர் கைலாசபிள்ளை நினைவாக, அவரது அன்புப் பணிப்பினை ஏற்று, நான் எழுதிய **இருபெரும் நெறிகள்** என்னும் நூல் வெளியாகின்றது. 'இந்து நாகரிகம்' என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்க்குப் பயன்படல் கருதி, சைவ நெறி, வேதாந்த நெறி ஆகிய இரு நெறிகளையும் பற்றி எழுதப்பட்ட இரு கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

'சைவ நெறி' என்ற முதற்கட்டுரை 'இந்து சமய பாடம்' என்னும் எனது நூலிலிருந்து தொகுக்கப்பட்டும், விரிவாக்கம் செய்யப்பட்டும் வெளியாகின்றது. இவ்விருபணிகளையும் திறம்படச் செய்தளித்தவர் நண்பர் மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள்.

'வேதாந்த நெறி' என்ற இரண்டாவது கட்டுரை கி. லக்ஷ்மணன் அவர்களின் 'இந்திய தத்துவ ஞானம்' என்னும் நூலையும், கலாநிதி சந்திரதர்சர்மா அவர்களின் **'A Critical Survey of Indian Philosophy'** என்னும் நூலையும் ஆதாரங்களாகக் கொண்டு நான் எழுதியது.

சிக்கல்களும், விளங்கற்கருமைப்பாடும் கொண்ட தத்துவநெறிகளை எனது சிற்றறிவு கொண்டு விளக்க முற்படுகையில் பிழைகள் ஏற்படாது போகா. அவற்றை அறிஞர்கள் பெருமனம் கொண்டு பொறுப்பார்களாக.

நண்பர்கள் சரவணமுத்து, மயிலங்கூடலூர் நடராசன், அமரர் கைலாசபிள்ளை குடும்பத்தினர் அனைவர்க்கும் என் நன்றி உரியது.

**க. சொக்கலிங்கம்**
**(சொக்கன்)**

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
1988-11-24.

'சைவ நெறி' என்ற முதற்கட்டுரை 'இந்து சமய பாடம்' என்னும் எனது நூலிலிருந்து தொகுக்கப் பட்டும், விரிவாக்கம் செய்யப்பட்டும் வெளியாகின்றது. இவ்விருபணிகளையும் திறம்படச் செய்தளித்தவர் நண்பர் மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள்.

'வேதாந்த நெறி' என்ற இரண்டாவது கட்டுரை கி. லக்ஷ்மணன் அவர்களின் 'இந்திய தத்துவ ஞானம்' என்னும் நூலையும், கலாநிதி சந்திரதர்சர்மா அவர்களின் 'A Critical Survey of Indian Philosophy' என்னும் நூலையும் ஆதாரங்களாகக் கொண்டு நான் எழுதியது.

சிக்கல்களும், விளங்கற்கருமைப்பாடும் கொண்ட தத்துவநெறிகளை எனது சிற்றறிவு கொண்டு விளக்க முற்படுகையில் பிழைகள் ஏற்படாது போகா. அவற்றை அறிஞர்கள் பெருமனம் கொண்டு பொறுப் பார்களாக.

நண்பர்கள் சரவணமுத்து, மயிலங்கூடலூர் நடராசன், அமரர் கைலாசபிள்ளை குடும்பத்தினர் அனைவர்க்கும் என் நன்றி உரியது.

**க. சொக்கலிங்கம்**
*(சொக்கன்)*

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
*1988-11-24.*

உ

# சைவ நெறி

## அறுவகைச் சமயம்

**முன்னமிரு மூன்று சமயங்கள் அவையாகிப்**
**பின்னையருள் செய்த பிறையாளன்...**

என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அறுவகைச் சமயங் கள் பற்றித் தமது தேவாரத்தில் திருவாய் மலர்ந்தருளினார். காண பத்தியம், கௌமாரம், வைணவம், சௌரம், சாத்தம், சைவம் என்பன அறுவகைச் சமயங்களாகும். அத்துவிதத்தை நிறுவியவ ராகிய சிறீ சங்கராச்சாரியார் அறுவகைச் சமயங்களையும் மீள நிறுவினார்.

## சிவமும் சைவமும்

'உண்மைப் பொருள் ஒன்றே. அதனை அறிவாளர் பல பெயர் களால் வழங்குவர்' என்று இருக்கு வேதம் கூறும். அந்த உண் மைப் பொருளைச் சைவர்கள் சிவம் என்று போற்றுகின்றனர். சிவம் மங்கலமானது; ஆனந்த மயமானது; பேரறிவும் பேராற்றலும் பேரருளும் வாய்ந்தது.

## முதனூல்கள்:-

**(அ) வேதம் — ஆகமம்**

சைவத்தின் முதனூல்சள் வேதங்களும் ஆகமங்களும் ஆகும். வேதம் பொது நூல் எனவும் ஆகமம் சிறப்பு நூல் எனவும் கொள் வது சைவமரபு வேதங்களை ஏற்றுக் கொண்ட காரணத்தினாலே சைவசமயம் வைதிக சைவம் எனவும் வழங்கும். 'வேத நெறி தழைத் தோங்க மிகுசைவத் துறை விளங்க...' என்பது திருத் தொண்டர் பெரியபுராணத் திருவாக்கு.

சைவ நெறியில் ஆகமங்களே முதன்மை பெறுகின்றன. இறை வனே ஆகம வடிவானவன் என்பது சைவர்கள் கருத்து '‘ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க,, என்பது மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாக்கு. வேதங்கள் யாகக் கிரியைகளை வழிபாட்டு முறையாகக் கொள்கின்றன. ஆலயங்களோ ஆகம வழிபாட்டிற்கு முதன்மை அளிக்கின்றன. சைவர்கள் ஆலய வழிபாட்டிலேயே பெரி தும் ஈடுபட்டு வருவதால் ஆகமங்கள் சைவர்களுக்குச் சிறப்பு நூல் களாகும். ஆகமங்கள் முதன்மை பெறுவதாற் சைவநெறியினை ஆக மாந்தம் என வழங்குவது மரபு, காமிகம் முதல் வாதுளம் வரை சைவாகமங்கள் இருபத்தெட்டாகும்.

ஆகமங்கள் கோயில்களின் அமைப்பு, விக்கிரகங்களின் அமைப்பு, அவற்றை ஆலயங்களிலே எழுந்தருளச் செய்தல் (பிரதிட்டை), பூசைக்கிரமம், அபிடேகம் ஆகியவற்றையும்' மூவகை வழிபாட்டு முறைமைகளையும், நால்வகைப் பாதங்களையும், பதி, பசு, பாசம் என்னும் தத்துவத்துறை சார்ந்த முப்பொருள்களின் இயல்புகளையும் கூறுகின்றன.

வேதங்களையும் ஆகமங்களையும் பொது, சிறப்பு என வகுத்து ஏற்றுக்கொண்ட சைவசமயம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழிலே உள்ள தோத்திரங்களையும் சாத்திரங்களையும் மிகுதியும் போற்றி அவற்றையும் தனக்குப் பிரமாண நூல்களாகக் கொள்கின்றது. இவ்வாறு கொள்ளும் நெறி சைவசித்தாந்த நெறி எனப் பெயர் பெறும். சைவசமயம் பற்றிய அறிவின் முடிந்த முடிவு என்பது சைவ சித்தாந்தம் என்ற சொற்றொடரின் பொருளாகும்.

இறைவனைப் பல நிலைகளிலே வழிபட்டு அவன் பெருமைகளைத் திருப்பாடல்களாக அடியார் பெருமக்கள் எமக்கு அருளியுள்ளனர். இவை தோத்திரப் பாக்கள், சிவபெருமானின் அருளைத் துணைக் கொண்டு பாடியருளப்பட்டவையாதலின் இவற்றைத் 'திருவருட் பாக்கள்' எனச் சான்றோர் வழங்குவர். இவை பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவையே தோத்திரங்களாகும்.

ஆகமக் கருத்துக்களையும் திருமுறைகளிற் பொதிந்துள்ள உண்மைகளையும் தொகுத்துப் பதி, பசு, பாச இயல்புகளையும் நுட்பங்களையும் எடுத்துக் காட்டித் தமிழிலே யாத்தருளிய நூல்கள் சாத்திரங்களாகும். இவை தொகையாற் பதினன்கு. இவற்றைச் சித்தாந்த சாத்திரங்கள் என்றும் மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் அழைப்பர்.

இவ்வாறு பரந்த நூற் பரப்பும் செழுமையும் பக்தியுணர்வும் ஞான நோக்கும் ஒன்றிணைந்து வரலாற்றுக்கு முற்பட்ட காலந் தொடக்கம் சைவ மக்களை வழிப்படுத்தி வரும் பெருநெறியே வைதிக சைவ நெறியாகும்.

## சைவநெறியின் மூவகை இயல்புகள்:-

சைவநெறி ஏனைய சமய நெறிகளைப் போலவே வழிபாட்டு முறைமை, ஒழுக்கவியற் கோட்பாடு, தத்துவ ஆராய்ச்சி என்னும் கூறுகளையும் தன்னகத்துக் கொண்டதாகும். சிவபெருமானைப் பல வகைத் திருமேனிகளிலே ஆலயத்தில் எழுந்தருளச் செய்து வேத சிவாகம முறை தவறாது பூசை, அபிடேகம் முதலியவற்றால் வழி



படலும் திருமுறைகளை ஓதுதலும் பஞ்சாட்சர மந்திர செபமும் திருநீறு உருத்திராக்க தாரணமும் வழிபாட்டிற் சிறப்பிடம் பெறுகின்றன. குரு, இலிங்கம், சங்கமம் ஆகிய மூவகை வழிபாடுகளும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகைப் பாதங்களும் சைவ நெறிக்கு உயிர் நாடியாய் உள்ளன.

'அன்புஞ் சிவமும் வேறல்ல. ஒன்றே, என்ற கோட்பாட்டிற் கிசைய உயிர்கள் யாவிலும் அன்பு காட்டல், பொய் பேசாமை, மாமிசம் உண்ணாமை, மது அருந்தாமை, விபசாரம் செய்யாமை, கொலை செய்யாமை ஆகியன சைவநெறி வற்புறுத்தும் ஒழுக்கங்களாகும். தமக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி எவருக்கும் சமமான நீதி வழங்கலையும் சைவநெறி வற்புறுத்தும் 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்' என்பதே சைவச் சான்றோர் ஏற்று ஒழுகும் உயர்ந்த குறிக்கோள். இக்குறிக்கோளை மனுநீதி கண்ட சோழனின் தேர்க்காலிற் சிக்கிப் பசுக்கன்று இறந்து போயிற்று என்று கேள்வியுற்ற அவ்வேந்தன் உற்ற துயரினை விளக்கும் பின்வரும் திருத்தொண்டர் பெரிய புராணப் பாடல் எமக்குக் காட்டும்.

அவ்வுரை கேட்ட வேந்தன்
ஆவுறு துயரம் எய்தி
வெவ்விடம் தலைக்கொண் டாற்போல்
வேதனை அகத்து மிக்கிங்
கெவ்வினை விளைந்த வாறென்
றிடருறும் இரங்கும் ஏங்கும்
செவ்விதென் செங்கோல் என்னும்
தெருமரும் தெளியும் தேறான்.

தன்னுயிர்போல் மன்னுயிர்களையும் எண்ணி அவற்றிற்கு நீதி வழங்குவதோடு அவற்றிற்கு இரங்கி அவற்றின் நல்வாழ்விற்காய்த் தொண்டுகள் புரிதலும் சைவ நெறியே யாகும்.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

என்றும்

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே

என்றும்

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே

என்றும் தாயுமான சுவாமிகள் கூறியுள்ளமையை அறிந்து சைவ மக்கள் ஒழுகுதல் வேண்டும்.

அவனது சடையில் மறைந்துள்ள கங்கையும், 'ஏற்று ஊர்தியான்' என்று அவன் இவர்ந்தருளும் இடபமும், 'புதுத்திங்கட் கண்ணியான்' என்று அவன் முடியிற் சூடிய சந்திரனும் குறிக்கப்படுகின்றன. மற்றுஞ் சிவனது காற்பெருவிரலின்கீழ் அழுந்தி வருந்திய இராவணனின் வரலாறு, அப்பெருமான் இமயத்தை வில்லாக்கி வாசுகியை நாணாக்கி முப்புரம் அழித்த வரலாறு என்பனவும், அவனது நெற்றிக்கண் பற்றியும் கலித்தொகையிலே செய்திகள் உள்ளன. புராணக் கதைகள் அக்காலத்திலேயே செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு இவை தக்க சான்றுகள் எனலாம்.

தெய்வம் உறையும் இடங்களாகத் 'துறையும் ஆலமரமும் தொல்வலி மராமும்' (மராமரமும்) (கலி. 104) அக்காலத்திற் கொள்ளப்பட்டன, ஆலமுற்றம் சிவனுர் உகந்து அமர்ந்தருளுவது என்ற செய்தி அகநானூறு 181 ஆம் பாடலில் வருகின்றது.

"நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்"
ஆலமுற்றம் ......................"

சிறுபாணாற்றுப் படையிலே 'ஆலமலர் செல்வன்' (96) என வருவதும் நோக்கத்தக்கதே. சிவனுக்கு உரிய ஆயுதம் சூலம் என்பதைச் "சூலம் பிடித்த சுடர்ப்படைக் காலக்கடவுள்" என்ற பதிற்றுப்பத்துப் பாடலடி எடுத்துக்காட்டும். 'உமையொருபாகதன்' என்பதை 'ஒரு குழை ஒருவன்' என்று கலித்தொகை குறிப்பாகச் சுட்டுகின்றது. சிவனுக்குரிய கொடி "ஆனேற்றுக் கொடி" எனவுங் கூறுகிறது (கலி. 26). இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும்பொழுது சங்க காலத்திலேயே சிவபெருமானுக்குரிய திருவுருவ அமைப்புப் பற்றிய புராணச் செய்திகள் நிலவியுள்ளன என்பதும் அச்செய்திகளின் அடிப்படையிலே அக்கால மக்கள் சிவனை வழிபட்டனர் என்பதும் பெறப்படுகின்றன. மதுரைக் காஞ்சியிலே பஞ்சபூதங்களையும் ஆக்கியளித்தோனும் சிவபெருமானே என்ற கருத்துத் தரப்பட்டுள்ளது.

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் ... (மதுரைக்காஞ்சி 453-55)

## சிவனின் மூர்த்தங்கள்:-

சிவபெருமானுக்கு இருபத்தைந்து மூர்த்தங்கள் கூறப்படுகின்றன. இலிங்கோற்பவ மூர்த்தி, சுகாசன மூர்த்தி, உமாசகித மூர்த்தி, கல்யாண சுந்தரமூர்த்தி, அர்த்தநாரீச்சர மூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, சக்கரப் பிரதான மூர்த்தி, திரிமூர்த்தி என்பன அவற்றுட் சிலவாகும்.



சிவபெருமானை உருத்திரன் என்ற பயங்கரமூர்த்தத்தில் வழிபடுவோர் ஆறு பிரிவினராய் உள்ளனர். இவர்களின் பிரிவுகள் வாமம், பைரவம், மகாவிரம், காளாமுகம், காபாலிகம், பாசுபதம் என்பன. இவர்கள் மதுமாமிசம் உண்பவராயும் சுடலை போன்ற இடங்களை நாடிச் சென்று சிவ வழிபாடு நிகழ்த்துபவராயும் இருந்தனர். இவர்களின் சைவப் பிரிவுகள் இன்று அருகிவிட்டன

சௌமியப் பிரிவு எனப்படும் வேறொரு சிவவழிபாட்டுக் குழுவும் உள்ளது. இதில் எட்டு உபபிரிவுகள் கூறப்படுகின்றன இவை ஐக்கியவாதம், பாஷாண வாதம், பேதவாதம், சமவாதம், சங்கிராந்தி வாதம், அவிகார வாதம், சித்தாந்தவாதம் என்பன. இவற்றின் குறிப்பிடக் கூடிய ஒற்றுமை இவற்றைப் பின்பற்றுவோர் தாவர போசனிகளாயும் சிவத்தை அன்பு வடிவாக வழிபாடுவோர்களாகவும் விளங்குவத. எனினும் தத்துவ அடிப்படையிலே இவர்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிறப்பாக முத்திநிலை பற்றிய கருத்தில் முரண்பாடுகள் அதிகமாய் உள்ளன.

சிவலிங்கத்தை வழிபடும் வீரசைவம், வட இந்தியாவில் ஒரு பிரிவினராலே கடைப்பிடிக்கப்படும் காஷ்மீர சைவம் என்றவேறு பிரிவுகளும் உள்ளன. மேலே கூறிய ஐக்கிய வாதம் முதலியவற்றுளும் சில உபபிரிவுகள் காணப்படும்.

இங்குக் குறித்த சித்தாந்த சைவம் என்பதே தமிழ் நாட்டிலே பிரசித்தி அடைந்துள்ளது. இதனையே சைவசித்தாந்தம் என்ற பெயரால் அழைக்கின்றோம்

## சைவசித்தாந்த தோத்திரங்கள்:-

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய நாயன்மார் மூவரும் அருளிய தேவாரங்கள் (1-7 ஆந் திருமுறைகள்), மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் (8 ஆந் திருமுறை) (இந்நால்வரும் சைவ சமய குரவர்கள்), சேந்தனுர் முதலிய ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா, சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டு (9 ஆந் திருமுறை), திருமூலர் அருளிய திருமந்திரம் (10 ஆந்திருமுறை), திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், சேரமான்பெருமான் நாயனுர் முதலிய பன்னிருவர் அருளிய பிரபந்தங்கள் நாற்பது (11 ஆந்திருமுறை) சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் பெரியபுராணம் (12 ஆந் திருமுறை) ஆகியவை சைவ சித்தாந்த தோத்திர நூல்களாகும். இவற்றுள் தேவாரம், திருவாசகம். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்

தொண்டர் பெரியபுராணம் என்பன சிவாலயங்களில் சிவனருள்
வேண்டிப் பக்திக் கனிவோடும் பண்ணமைதியோடும் ஓதப்பட்டு
வருவன. திருமந்திரம் தோத்திர நூலாகமட்டுமன்றி சாத்திர
நூலாக கொள்ளப்படுகின்றது பத்தாம் நூற்றாண்டில் இராச
இராசசோழன் வேண்ட நம்பியாண்டார் நம்பி என்ற சைவப் பெரி
யாரால் முதல் பதினொரு திருமுறைகளும் தொகுக்கப்பட்டன.
இவற்றிலிருந்தும் சைவசித்தாந்த அடிப்படை உண்மைகள் பல
பெறப்பட்டுள்ளன.

## சைவசித்தாந்த சாத்திரங்கள்:-

'சைவம்' சிவசம்பந்தம் உடையது. 'சித்து' என்பது எனம்
எனப் பொருள்படும் 'அந்தம்' என்பது முடிந்த முடிபாகும்
'சாத்திரங்கள் இவற்றை விளக்கும் தத்துவ நூல்கள். எனவே
சைவ சித்தாந்த சாத்திரங்கள் என்ற சொற்றொடரின் பொருள்
'சைவத்தின் முடிந்த முடிவான உண்மைகளை விளக்கும் தத்துவ
நூல்கள்' என்பதாகும். இவை குரு பரம்பரை வாயிலாக எமக்குக்
கிடைத்துள்ள ஞானச் செல்வங்கள்.

பரம்பரைக்குச் சந்தானம் என்பதும் வடமொழிப் பெயர். குரு
என்ற வட சொல்லின் பன்மை வடிவம் குரவர் என அமையும்.
சைவ சித்தாந்த சாத்திரங்களை எமக்கு அருளிய குருபரம்பரை
யினரை இக்காரணத்தினாலேதான் சந்தான குரவர் என நாம்
அழைக்கின்றோம் இவர்களின் ஆதி குரவர்கள் திருக்கைலாய,
திலே எழுந்தருளி இருந்தவர்கள் இதனால் இவர்களைத் திருக்கை
லாய ஞான பரம்பரை என அழைக்கும் வழக்கும் உண்டு.

சந்தான குரவர்கள் இரு வகைப்படுவர். அகச்சந்தான குர
வர் என்பது ஒருவகை. புறச்சந்தான குரவர் என்பது மற்றொரு
வகை அகச்சந்தான குரவர் திருக்கைலாய மலையில் எழுந்தருளி
அருளுபதேசம் செய்தவர்கள். இவர்களில் இறுதியான குருவிடமி
ருந்து உபதேசம் பெற்றுத் தமிழிலே ஞான நூல்கள் செய்த
ருளியும் சீடர்களுக்கு உபதேசித்தருளியும் தொண்டாற்றிய முதல்
வரிலிருந்து புறச்சந்தான குரவர் பரம்பரை தோன்றுகிறது.

சந்தான குரவர்களில் முதல்வர் ஸ்ரீகண்டபரமேசர். அவர் சிவாக
மங்களை ஆனந்த தேவருக்கு உபதேசித்தருளினார். ஆனந்த
தேவர் ஸ்ரீகண்டருத்திரருக்கு உபதேசித்தருளினார். ஸ்ரீகண்டருத்தி
ரர் நந்திதேவருக்கு உபதேசித்தருள அவர் சனற்குமாரருக்கு
சனற்குமாரர் சத்தியஞான தரிசினிகளுக்கும் சத்திய ஞான த



சினிகள் பரஞ்சோதி முனிவருக்கும் உபதேசித்தருளினார். நந்தி
தேவர் தொடக்கம் பரஞ்சோதி முனிவர் ஈறாக உள்ள நால்வரும்
அகச் சந்தான குரவர் எனப் பெயர் பெறுவர்.

பரஞ்சோதி முனிவரிடமிருந்து அருளுபதேசம் பெற்ற மெய்
கண்டதேவர் தமிழகத்தில் அவதரித்தவர். அவர் அருணந்தி
சிவாசாரியாருக்கும் அருணந்தி சிவாசாரியார் மறைஞான சம்பந்
தருக்கும் மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாசாரியாருக்கும்
உபதேசம் செய்தருளினர். இந்நால்வரும் புறச்சந்தான குரவர்
எனப்படுவர். சந்தான குரவரைச் சந்தானாசாரியர் எனவும் அழைப்
பதுண்டு. ஆசாரியர் – குரவர்.

புறச்சந்தான குரவர்களில் மறைஞான சம்பந்தர் தவிர்ந்த
மற்றைய மூவரும் சாத்திர நூல்களை இயற்றியருளியுள்ளனர்.
இவர்கள் இயற்றியருளிய மெய்கண்ட சாத்திர நூல்கள் பதி
னொன்று. இவர்களுக்கு முன்னரே திருவியலூர் உய்ய வந்த தேவ
ரும் அவரின் சீடருக்குச் சீடரான திருக்கடவூர் உய்ய வந்த தேவ
ரும் ஒவ்வொரு சாத்திர நூல் எழுதியருளினர். மெய்கண்ட
தேவரின் மற்றொரு சீடரான மனவாசகங் கடந்த தேவரும் ஒரு
நூல் யாத்தருளியுள்ளார். ஆக மெய்கண்ட சாத்திர நூல்களின்
தொகை பதினான்காகும். அவற்றின் விபரம் வருமாறு:

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்ய வந்த தேவர்.
2. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்ய வந்த தேவர்.
3. சிவஞான போதம் - மெய்கண்ட தேவர்.
4. சிவஞான சித்தியார் } அருணந்தி சிவாசாரியார்
5. இருபா இருபஃது } அருணந்தி சிவாசாரியார்
6. உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசகங் கடந்த தேவர்.
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா.
10. போற்றிப்பஃறொடைவெண்பா
11. கொடிக்கவி
12. நெஞ்சு விடு தூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

(7–14) → உமாபதி சிவாசாரியர்

### சைவசித்தாந்தம்:-

சைவம் பற்றிய அறிவின் முடிந்த முடிவே சைவ சித்தாந்தம், வேதங்கள், சிவாகமங்கள் தமிழிலுள்ள மேற்குறித்தசாத்திர, தோத்திர நூல்களின் அடிப்படையிலே சைவ சித்தாந்தம் உருவாயிற்று. இதன் பெருமை அளவிடற்கரியது. மேனாட்டறிஞரும் இதன் உயர்வினைப் பலபடப் போற்றியுள்ளனர்.

" சைவ சித்தாந்தமே திராவிட மேதையின் மிக உன்னதமான படைப்பாகும். அதுவே இந்தியாவில் தோன்றிய மதங்கள் யாவிலும் மிக நுட்பமானதும் மிகப் பெறுமதி வாய்ந்ததும் மற்றைய மதங்களிலே தன்செல்வாக்கினைப் பதித்ததுமான நல்ல சிறந்த மதமாகும்" என்பது திருவாசகத்தை மொழிபெயர்த்த ஆங்கிலேயப் பாதிரியார் ஜி.யூ.போப் அவர்களின் கருத்தாகும்.

## சைவசித்தாந்த சமயதத்துவம்

## (அ) முப்பொருள்

சைவசித்தாந்தம் காட்சி, கருதல், உரை என்ற மூவகை அளவைகள் கொண்டு முப்பொருள்கள் அநாதியானவை என நிறுவும் பதி, பசு, பாசம் என்பனவே அம் முப்பொருள்களுமாகும்.

காட்சியாவது ஐம்பொறிகளாலே பொருள்களைக் கண்டுணர்தல். கருதலாவது காட்சிக்குப் புலனாகாத பொருளை அதன் தொடர்புடையதும் உடன் தோன்றுவதுமாகிய வேறு பொருள் கொண்டு ஊகித்து அறிதல், உதாரணமாக, மலையிலே புகை தென்பட்டால் அங்கே நெருப்பு உள்ளது என நாம் ஊகித்தறியலாம். உரையாவது மேலோர் நூல்கள் வாயிலாகக் கூறியவற்றை ஆதாரங்களாய்க் கொண்டு உண்மையை அறிதல்.

சைவசித்தாந்தம் முற்றறிவுடைய சிவத்தையும் சிற்றறிவுடைய ஆன்மாவையும் அறிவில்லாப் பொருளாகிய ஆணவத்தையும் உள் பொருள்கள் என நிறுவும். உள்ள பொருள் அழிவதும் இல்லை. இல்லாத பொருள் தோன்றுவதும் இல்லை. எனவே மேலே கூறிய மூன்று பொருள்களுக்குத் தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. அவை அநாதியானவை என்பது சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிவாகும்.

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற் பசு பாசம் அநாதி - திருமூலர்

சிவம் பேரறிவு உடையது. பேரறிவாவது தானே உணர்வதும் அனைத்தும் அறிவதும் ஆகும். ஆன்மா சிற்றறிவுடையது. சிற்றறிவாவது உணர்த்த உணர்வதும் சார்ந்ததன் வண்ண



மாவதுமாகும். ஆணவமோ அறிவித்தாலும் அறியாத சடப் பொருள். இதன் சேர்க்கையாலே ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகிச் சிற்றறிவும் சிறுதொழிலும் கொண்டு அலைகின்றது. பேரறிவுடைய சிவம் தனது பேரருள் காரணமாக ஆன்மாவைத் தன்வயமாக்கத் தொழில் புரிகிறது. ஆன்மா பிறவிகள் தோறும் தன் கன்மங்களை அநுபவித்து அவற்றில் வெறுப்புண்டாகி, இறுதியிலே பேரருளாலே சிவத்தைச் சார்ந்து சிவத்தின் தன்மையை அடைகின்றது. இந்த உன்னத முத்தி நிலைக்கு ஆன்மா சிவத்தையே உறுதியாகப் பற்றி அன்பு செய்தல் வேண்டும். ஆக, அநாதியான முப்பொருள்களின் உண்மையை நிறுவுவதோடு, அவற்றினிடையேயுள்ள தொடர்பையுங் காட்டி ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவுவதாலே, சைவசித்தாந்தம் ஒரு தத்துவமாக மாத்திரமன்றிச் சமய நெறியாகவும் விளங்குகிறது. இவ்வகையிற் சைவசித்தாந்தத்தைப் போதனைவழி, சாதனை வழி என இரண்டாகப் பிரிக்கலாம்; போதனை வழி முப்பொருள் உண்மையைக் கூறும். சாதனை வழி முதற் பொருளை அடைதற்கான நெறிகளை எடுத்துரைக்கும். இந் நெறிகள் பாதங்கள் எனப்படும் சைவ சித்தாந்தச் சாதனை வழி நால்வகைப் பாதங்களைக் கொண்டது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

## (ஆ) பதி

பதி என்பது தலைவர் என்று பொருள்படும். அனைத்துலகிற்கும் அனைத்துயிர்கட்கும் தலைவரானதால், சிவபெருமான் பதியாயினர். அவர் எமது சிந்தனைக்கும் சொல்லுக்கும் அப்பாலானவர். ஐம்பொறிகளாலே அவரை அறிதல் இயலாது. எமது உள்ளத்துணர்ச்சியாலே அவரைக் கொள்ளுதல் இயலாது. எல்லா நலன்களும் அமைந்த அவருக்கு இணை இல்லை. குணங்களைக் கடந்த குணாதீதர் அவர். இந்நிலையில் அம் நிலை சொரூப நிலையாகும் இதனை "நிர்க்குண நிலை எனவும் உரைப்பர்.

மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே என்பது திருவாசகம். இத்தகைய 'ஆதி குணம் ஒன்றுமிலா அந்தமிலா' இறை, உயிர்களின் மீது கொண்ட பெருங்கருணையினாலே அவை அறிந்து வணங்கி உய்யத் திருமேனி தாங்கிவருகின்றார். இவ்வாறு திருமேனி கொள்ளும் நிலை தடத்தம் என வழங்கும். இது சகுண நிலை எனவும் படும். தடத்த நிலையிலே அவர் கொள்ளும் திருமேனிகள் அருவம், உருவம், அருவுருவம் என முத்திறப்படும். அருவத்திருமேனிகள் சிவம், சத்தி, நாதம், விந்து என்ற நான்கும் உருவத் திருமேனிகள் மகேசுரன், மால், அயன், உருத்திரன் என்ற நான்கும் அருவுருவத் திருமேனி, சதாசிவமாகிய ஒன்றுமாக ஒன்பது பேதங்களாகும்.

குட்டுணைகொண்டு சிவத்தை நாடிச் செல்வதாகிய யாத்திரை அப்பொழுதுதான் தொடங்குகின்றது. அந்நிலை ஏற்படும் வரை ஆணவமானது யான், எனது என்ற அகங்கார மமகாரங்களிலே ஆன்மாவை அழுந்திக்கொண்டிருக்கும்.

## ஆணவம் அநாதி என்பதைச் சைவசித்தாந்தம் நிறுவும் வகை

(1) ஆணவம் தொடக்கம் உடையது என்றால் அது தோன்று வதற்கு ஒருகாரணம் உளதாகவேண்டும். அக்காரணம் யாது? "ஒரு பொருள் இருந்தபடி இருப்பதற்குக் காரணம் வேண்டுவதில்லை. உதாரணம் (1 பலகையின் மேலிருக்கும் புத்தகம் இருந்தபடியே இருப்பதற்குப் புதிதாகக் காரணம் சொல்லவேண்டியதில்லை. எந் தெந்தத் தத்துவங்கள் அதை அந்த இடத்தில் முன் நிறுத்தினவோ, அவைகளோ அதைப் பின்னும் நிறுத்தத் தக்கவை. அந்தப் புத்த கம் அதிலில்லையாயின் அந்த மாறுதலைச் செய்தற்கு ஒரு புதுக்கார ணம் வேண்டும். அந்த இடத்தில் அதை நிறுத்தின தத்துவங்கள் குறைந்ததாயினும் கூடியாயினும் இருத்தல் வேண்டும். அந்தப் பல கையைச் சரித்தலாகிய ஒரு தத்துவம் கூடுதலால் அந்தப் புத்தகம் விழக்கூடும். (2) முன்பு பனிக்கட்டியாயிருந்த பொருள் பின்னும் கட்டியாயிருக்கக் காரணம் தேடவேண்டியதில்லை. பின்பு அது நீரானல் அதற்குக்காரணம் வேண்டும். இப்படியே ஒரு பொருளி னது நிலைமை மாறும்போது அந்த மாறுதற்குக் காரணம் வேண்டு மாதலால் ஆணவம் முன் வேறிடத்தில் நின்று பின் ஆன்மாவைச் சேர்ந்ததாயின், அந்த ஆணவத்தின் நிலையை மாற்றி ஆன்மா வோடு சேர்க்க ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அப்படி அதை ஆன்மாவோடு சேர்க்கத்தக்க பொருள் ஒன்றும் இல்லை: ஏனெனில் ஆன்மாவும், ஆணவமுமல்லாமல் நிற்கும் பொருளாகிய கடவுள் பேரருள் உடையவராதலால், ஆன்மாவுக்குத் துன்பத்தை வருவிக் கும் மலத்தை அதனோடு சேர்க்கமாட்டார். ஆன்மாவும் அறிவுடை யதாதலால் தனக்குத் தீமையான ஒரு பொருளைத் தேடிப் பிடி யாது. ஆணவம் சித்தப் பொருளன்றாதலால் தானாக ஆன்மா வைச் சேரமாட்டாது.

— சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் —

ஆணவத்தை ஆன்மாவோடு சேர்க்கத்தக்க காரணம் இல்லை, எனவே ஆணவம் ஆன்மாவை இடையிட்டுச் சேர்ந்ததன்று.

ஆகவே ஆணவம் ஆன்மாவோடு அநாதி காலந்தொட்டு உள்ளது.



(2) ஆணவம் இடையிலே ஆன்மாவைத் தானாகவந்து சேர்ந் ததும் அன்று. அவ்வாறு அது இடையிலே சேர்ந்ததாயின் ஆன்மா முத்தி நிலையிருக்கும் போதும் இடையில் வந்து சேர லாமன்றோ?

அவ்வாறு சேர்வதில்லை. ஆகவே ஆணவம் அநாதியானது. ஆன் மாவை அநாதியாகவே பற்றியுள்ளது.

## கன்மம்

பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் என ஆன்மாக்கள் செய் கின்ற கன்மங்கள் மூவகைப்படும்; பிராரத்துவம் என்பதை ஊழ் எனவும் கூறலாம். இது முந்திய பிறவியிற் செய்த கன்மங்கள் இப்பிறவியிலே வந்து பயன் தருவது. ஆகாமியமானது நல்வினை தீவினைகளை ஆன்மா வெளிப்படச் செய்யும்போது ஏற்படும்பயனாகும். சஞ்சிதம் இந்நல்வினை தீவினைக்கு ஏற்ற இன்பதுன்பங்களாய் வந்து தோன்றும் ஒன்று.

கன்மம் உள்ளது என்பதை மறுத்தல் இயலாது. ஏனெனில் ஒரு காரியம் நிகழ்வதற்குக் காரணம் அவசியமாகும் ஆன்மாக் கள் இன்பத் துன்பங்களாகிய காரியங்களை அநுபவிப்பதற்குக் கன்மமே காரணமாகின்றது.

பிறசமயங்கள் தீவினைகளைத் தவிர்க்குமாறும், நல்வினைகளைச் செய்யுமாறும் விதிக்கின்றன. நல்வினை மோட்சத்தைத் தரும் என்பது அவைகளின் முடிந்த முடிவு. சைவசித்தாந்தமோ நல் வினையும் மூலமலமாகிய ஆணவத்தின் முனைப்பைக் கெடுப்பதில்லை. ஆணவமுனைப்புக் கெடாதவரை பிறப்பு நீங்காது பிறப்புநீங்காத வரை முத்தி சித்தியாது என்றுகூறி நல்வினையையும், தீவினையையும் சமமாகக் கொள்ளும் நிலையே உயர்ந்தநிலை என்றும் அந்த நிலையி லேயே ஆணவம் நலிவடையத் திருவருட்பதிவு ஏற்படுகின்றது என்றுங் கூறுகின்றது. எல்லாவகையாலும் இறைவனும் அவனது திருவருளுமே முத்தியை அடைத்தற்கான முதலும் வழியும்எனச் சைவசித்தாந்தம் அறுதியிட்டு உரைப்பது கருதத்தக்கது.

நல்வினைகளை இக்காரணத்தினலேயே பசுநல்வினை, பதிநல்வினை என இரண்டாக வகுக்கின்றனர். பசுநல்வினையாவது, சக ஆன்மாக் களுக்குச் செய்யப்பெறும் புண்ணியங்களாகும். இவை தொடக்கமே யன்றி முடிவல்ல, முடிவான ஒரே முத்திவழி பதிநல்வினை ஒன்று தான். பதிநல்வினையானது இறைவனையும், அடியார்களையும்குருவை யும் மனமொழி மெய்களாலே வழிபடுதலும் அவ்வழிபாட்டிற்கு அநுசரணையானவற்றைச் செய்தலுமாகும்.

# பிழை திருத்தம்

| பிழை | | திருத்தம் | பக்கம் |
|---|---|---|---|
| தலேகளினின்றும் | - | தளேகளினின்றும் | 12 |
| அல்லறும் | - | அல்லலுறும் | 12 |
| இருளிருந்து | - | இருளிலிருந்து | 12 |
| புறவழி | - | புறவாழி | 12 |
| அறவழி | - | அறவாழி | 12 |
| அவைகளோ | - | அவைகளே | 16 |
| குறைந்ததாயினும் | - | குறைந்தாயினும் | 16 |
| இது 'இது அஜாதிவாதம் | - | இது அஜாதிவாதம் | 21 |
| துயில் | - | துயிலில் | 23 |
| சுஷப்தி | - | சுஷுப்தி | 23 |
| கௌடபாத—க்கே | - | கௌடபாதர்க்கே | 24 |

